நாள்: 28.10.2025
OS. 105/2022
பெயர் குமரேசன்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய தொழில் பற்றி முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விவசாயம் செய்து வருகிறேன். நான் என் மனைவி நீலாவதி கணவர் என்ற முறையில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் வாதியின் தகப்பனார் பெயர் கோபால் என்றால் சரிதான். இறந்து போன என் மாமனார் கோபாலுக்கு, அவரது தாயார் பார்வதி, மனைவி மாரியம்மாள், என் மனைவி நீலாவதி, என் மைத்துனன் ஹரிதேவன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்குரை சொத்துக்களும், மற்ற சொத்துக்களும் கணக்கைய கவுடர் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவர் என் மனைவியின் அப்பாவழி தாத்தா ஆவார். 04.05.1970 அன்று அவரது 3 ஆண் வாரிசுகளும் அவர் குடும்ப சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட பாக ஆவணம் மூலம் பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை C schedule சொத்து என் மாமனார் கோபால் பாகத்திற்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். 26.11.2019ம் தேதி ஹரிதேவன் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் மூளை மற்றும் இருதய பிரச்சனை சம்பந்தமாகவும் சிகிச்சை எடுத்து பலனிற்றி இறந்து விட்டார். என் திருமணத்தின் போது நான் எவ்வளவு நகை மற்றும் சீர் பொருட்களை பெற்றுக்கொண்டேன் என்றால் நான் 1 ரூ கூட வாங்கவில்லை. என் மாமனார் இறந்துவிட்டார் என் திருமணத்தை பதிவு செய்தேன். திருமணத்தின் போது 10 பவுன், ரூ.15,000/- சீதன பொருட்கள் என்மாமனார் வீட்டில் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் திருமணத்தின்போது 1ம் பிரதிவாதியின் கணவரிடம் நான் அவ்வப்போது பணம் வாங்கி செலவு செய்தேன் என்றால் சரியல்ல. நான் எந்த பணமும் அவரிடம் வாங்கவில்லை. 10.10.2000ம் வருடத்தில் என் மாமியாரிடம் நான் புரோநோட்டின் அடிப்படையில் ரூ.15,000/- கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. என் மாமியார் என்னுடன் இருந்தார். 2015ம் ஆண்டில் மாரியம்மாள், என் மைத்துனர் ஹரிதேவன் ஆகியோர்கள் என் மனைவி பெயரில் காலியிடம் வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. காலியிடத்தில் வீடு கட்டுவதற்கு மைத்துனர் ஹரிதேவன் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. சொத்தில் பாகம் கேட்டு என் மனைவி, என் மாமியார் மற்றும் என் மைத்துனருகக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த வழக்கறிவிப்புக்கு பின்னர் 2015 ல் சமுதாய பெரியோர்களை வைத்து சமாதானம் பேசினார்கள் என்றால் சரியல்ல. அப்படி ஒரு

சம்பவமே நடக்கவில்லை. அந்த சமாதானத்தின் போது குடும்ப சொத்துக்களை பொறுத்து ஒரு குடும்ப ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. கூடலூரில் முத்துராஜ் மகன் சிவக்குமார், ராமலிங்கம் மகன் முருகன் ராஜ கவுடர், மகன் R.முருகன் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது எனக்கு கம்பம் அவர்கள் இருப்பது கூடலூர். மேற்படி நபர்கள் முன்பு நடைபெற்ற பஞ்சாயத்தில் என் மனைவி கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. அந்தசமாதனத்தின் படி தாவா வீடு என் மைத்துனர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றும், குடும்ப பொதுக்கடன்களை ஹரிதேவனே செலுத்த வேண்டும் என்றும், அவரது தாயாரை ஆயுட்காலம் வரை பராமரிக்கவேண்டும் என்றும், என் மனைவி அவருக்கு கொடுத்த வீட்டை சர்வ சுதந்திரமாக பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அனைவரும் அந்த சமாதானத்தை ஒத்துக்கொண்டு சொத்துக்களை பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. என் மைத்துனர் ஹரிதேவனுக்கு தமிழ் செல்வன் என்ற மகன் இருந்தான் என்றால் சரிதான். அவர் பள்ளியில் படிக்கும் போதே இறந்து விட்டார். அவர் மருத்துவ சிகிச்சைக்கு ரூ.13,00,000/– ஹரிதேவன் செலவு செய்தார் என்றால் அவர் அவரது மகனுக்கு செய்திருப்பார், அதுக்கும் எனக்கும் சம்பந்தம் கிடையாது. அந்த ரூ.13,00,000/– செலவும் பொதுக்கடன் என்றால் சரியல்ல. என் மாமியார் 23.07.2021 அன்று இறந்த பின்னர் இந்த பாக வழக்கை என் மனைவி மூலமாக, நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்யளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகமான சொத்தை பொறுத்து நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.